LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II – 2005/2006(வெளிவாரி)
### (பெப்ரவரி/மார்ச் 2008)

## ECO 302 பிரயோகப் பொருளியல்

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

01. (அ) 1977ம் ஆண்டு இலங்கைப் பொருளாதாரமானது தாராளமயமாக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட சாதக பாதக விளைவுகளை பரிசீலிக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) 1994 தொடக்கம் இன்றுவரையான காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை சுருக்கமாக விபரிக்குக.
(10 புள்ளிகள்)

02. இலங்கையின் கிராமிய விவசாயத்துறை எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளையும் அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மதிப்பிடுக.
(20 புள்ளிகள்)

03. (அ) சனத்தொகை வளர்ச்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பை இலங்கையின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) "தற்காலத்தில் சர்வதேச வர்த்தகம் பொருளாதார வளர்ச்சியின் இயந்திரம் என வர்ணிக்கப்படுகின்றது". இக்கூற்றுக்கு சார்பாகவும் எதிராகவும் விவாதிக்குக.
(10 புள்ளிகள்)

04. இலங்கையில் 1975ம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் சட்டம், பெருந்தோட்டத் துறையில் ஏற்படுத்திய தாக்கங்களை விமர்சன ரீதியாக மதிப்பிடுக.
(20 புள்ளிகள்)

05. (அ) தனியார் மயமாக்கலைத் தொடர்ந்து பெருந்தோட்டத் துறையின் செயலாற்றத்தினை மதிப்பீடு செய்க.
(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெருந்தோட்டத் துறையின் பங்கினை மதிப்பீடு செய்க.
(10 புள்ளிகள்)

LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka

06. இலங்கைப் பொருளாதாரத்தில் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றியும், கைத்தொழில் துறை வளர்ச்சி தொடர்பாக பின்பற்றப்பட்ட கொள்கைகள் பற்றியும் ஆராய்க.
(20 புள்ளிகள்)

07. (அ) உலகமயமாக்கல் மூலம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அனுபவிக்கும் நன்மைகள் தீமைகள் பற்றி ஆராய்க.
(10 புள்ளிகள்)

(ஆ) இடைக்கால சமாதானத்தின் மூலம் இலங்கைப் பொருளாதாரம் அனுபவித்த நன்மைகள் பற்றி மதிப்பிடுக.
(10 புள்ளிகள்)

08. பின்வருவன பற்றி சிறு குறிப்பு எழுதுக.

i. உள்நாட்டு விவசாயம் மீது நிலச் சீர் திருத்தங்களின் தாக்கங்கள்
ii. உயர் படு கடன் மூலம் இலங்கை பொருளாதாரம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.
iii. இலங்கையில் பணவீக்கம் மீது பெற்றோலிய விலை உயர்வின் தாக்கங்கள்.
iv. இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான உள்நாட்டு யுத்தத்தின் தாக்கங்கள்

***********